Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி

LIBRARY 2 -10- 1995 UNIVERSITY OF JAFFNA

பத்திரிகைவிலைவிகிதம்
வருஷத்துக்கு ரூபா ௨-00
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௫௦
இந்தியாவுக்குசதம் ௫௦
பிறதேசங்களுக்கு ௭௫

SANMARKA POTHINI

சாதுசங்கஞ் சன்மார்க்கசாதனம்

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குசதம் ௧௦
௧௦ க்குமேல்ஒருவரிக்கு ௫
௨௦ க்குமேல்........
இணைப்பிரசுரமொல்லொ
ன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டொரு புதன்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்.

Published on every other Wednesday

VOL. XXXIV. JAFFNA DECEMBER 11th 1918. No. 24

௩௪ம் புத்தகம். யாழ்ப்பாணம் ௧௯௧௮ம் ஞு மார்கழி ௴ ௧௧௳ புதன்கிழமை. சஞ்சிகை ௨௪

செகராசசேகர பிறமேகநிதானம்.

௧௨ம் இலக்கப் பத்திரத்தொடர்ச்சி.

ஆமேவளிபமிறமேகம் அடருஞ்சலந்தின்குணங்கேளும்
வேமையுடலுக்ககாகமுண்டாம் நிகழுமிழுக்கும்குமரிச்சர்
ருமேனைவுள்ளுநெறுகும் ஆவின்நெய்போற்சலம்தோற்றும்
பூமேல்கபனமஞ்சணிக்கும் புலம்பும்புகழும்புலவரே. 16
உரைப்பாமைபமொருபானிற் குணங்கான்சேரும்மதுர்மதாங்
கரைக்கேஇழியுஞ்சலங்காய்ச்சில் காய்ந்ததண்ணீர்தானுறும்
புரைக்கேகத்தனீராகும் புகவிற்கடுப்புமெரிப்புமில்லே
வரைத்தார்தனத்தாய்கண்வெளுக்கும் வருமச்சிறுநீர்காருமே. 17
நாருச்சிறுநீரயமேகம் நாதுக்கள்ளுநாறும்
மாருச்சலந்தான்சிக்கிவிழும் வளர்ச்சேதிரைப்புமுண்டாகும்
விருப்பத்தந்தம்விழுமிருமும் மிகவுஞ்சிரகோமிடநபுண்ணும்
ஆருசசொறியும்உடம்பிலிக்கும் ஆமக்குணங்கள்சொன்னேமே. 18
சொன்னேஞ்சத்திக்குஞ்சலந்தான் சோற்றும்பனியின்கொக்கதுபோல்
வின்னேயெரியும்மோர்போல வெண்மையானநீர்விழும்
மின்னார்மயலாலதுன்கடுக்கும் விழலையழிக்கும்உடல்வெளுக்கும்
பொன்னேபூவில்அனுபோகம் போகுமருகதைப்போமே. 19
போமர்வேணபிரமியத்தின் சலக்கான்புகலில்நீரதன்மேல்
காடிவெளுக்குமடி தனிலே கல்மாக்கவீத்தததுபோலாம்
கூடும்சிறுநீர்சிக்கிவிழும் குளவுனைப்பார்த்திடில்
தேடும்பலவனமாகும் திரும்பத்திரும்பவருந்தானே. 20

தேவை.

யாழ்ப்பாண வியாபார சமுதாயத்தின் வண்ணார்பண்ணை முதலாம் இலக்கப் புடவைக்கடைக்கு 1919ம் ஞு மாசி௴ 1உ தொடக்கமாக ஓர் மனேசர் தேவை.

இருபதினாயிரம் ரூபா பெறுமதியான ஆதனப் பிணை கொடுக்கவேண்டியது.

புடவை வியாபாரத்தில் அநுபவமுள்ளவர்கள் சமுதாய மனேசரிடம் எழுத்திலே கேட்கவும்.

சுந்தரன்செய்த தந்திரம்.

இது புஸ்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. தற்காலகாசிதவிலையை நோக்கிச் சொற்பபிரதிகள்தான் அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை சதம் **50**. தபாற்செலவு வேறு. இந்தியாவுக்கு அணா **8**. வி. பி. தபாற்செலவு அணா **4**. இந்த நாலணாச் செலவில் நாலைந்து புஸ்தகமும் அனுப்பலாம். விரும்பினோர் சன்மார்க்கபோதினி மனேஜருக்கு எழுதுக.

கையொப்பவரவு.

Colombo,
Asst. Supt. of Police 2-50
அச்சுவேலி
ஸ்ரீ அ. கணபதிப்பிள்ளை 5-00
காரைதீவு
மெஸ், ஜோர்ஜ ஆசீர்வாதம் உபதே. 2-50
கோப்பாய்கிலாய்கூர்
" அ. செ. அபிர்தநாதபிள்ளை 2-75

பஞ்சமும் வரியும்.

[illegible] என்பதுபோலத் தற்காலம் யுத்தம் ஓய்ந்தும் பஞ்சந்தீர்வதாய்க்காணவில்லை. சனங்களின் கஷ்டம் குறைவதற்குப்பதிலாய் அதிகரித்திருக்கிறது. உணவுப்பொருட்களெல்லாம் இருமடங்கு மும்மடங்கு விலையேறிவிட்டது. அரிசி கொத்தொன்று 36 சதம் வரையிலும்விற்றது. அரக்கன் றக்கூன் முதலியஇடங்களிலிருந்து நெல்லரிசி அனுமதியுடன் ஏற்றலாமென்றாலும் சில தென்னிந்திய துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கையிலும் சிலஇடங்களில்இவ்விதமே தடுக்கப்பட்டிருக்கிறது. "தனக்குக்கண்டு தானம்வழங்கு" என்றபடி ஒரு ஊர் பஞ்சத்தின் வாய்ப்படவிட்டு அவ்வூர் விளைபொருளைப் பிறவூர்க்கேற்ற அனுமதிகொடுத்தல் சரியன்றாதலால் அவர்தடையில் நாம் குறைகூறலாகாது. ஆனால் அவ்விதமே நமதூரிலும் நடைபெற்றாலோவென்றஞ்சுகிறோம். உதாரணமாய் நம்மூரில் செய்கைபண்ணப்படும் மிளகாய் நம்மூருக்குப் போதியதாயிருக்கும். ஆனால் வேறிடங்களுக்கு ஏற்றப்படுவதால் நாமே மறுபடி உச்சவிலைகொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. இதை அரசினர் சிந்திக்கவேண்டும். அன்றியும் உணவுப் பொருட்களின் தீர்வையைக்குறைத்து இசுவரியவான்களுக்கு உபயோகமான பொருட்களுக்குத் தீர்வையை ஏற்றவேண்டும். சிலவகையிற சாதாரண மனிதரும் பாவிக்கவேண்டிய வெள்ளைச்சீலைகள் இந்திய இளக்கச்சேலைகள் ஆகியவைகளின் தீர்வையைக் குறைத்து, பட்டு கம்பளி முதலிய ஐசுவரியவான்கள் பாவிக்கும் சிலவகைகளுக்குத்தீர்வையை உயர்த்திவிட்டாலென்ன? இங்கிலந்திலுள்ளாரின் நன்மைக்காக தப்பாற்தீர்வையைக் குறைக்கிறதைக்குறித்து இலங்கைவாசிகள் குறைசொல்லுகிறார்கள். இங்கிலந்தும் இச்சயுத்தத்தினால் மிகு கஷ்டமடைந்திருப்பதால் ஏதும் நன்மைசெய்யப் பிரியமானால் செய்யலாம். ஆனால் நம்மைக் கஷ்டப்படுத்தாமலே அவர்க்கு நன்மைசெய்யவேண்டும். பால்தொட்டுப் பால்கறப்பதுபோல நமக்கும் ஒரு நன்மையைக்காட்டி நம்மூர் பஞ்சத்தின்வாய்ப்படாமல் பாதுகாததுக்கொண்டே வரிகளை உயர்த்துதல் நீதி. அரசபக்கப்பிரதிநிதிகள் அதிகமென்றதையுன்னி அவசரமதெரியப்பட்டகொமிற்றியையேயிருந்து வரியை உயர்த்துகிறார்களென்று சனங்கள் கூக்குரல்செய்ய விடப்படாது. ஆடி கினைத்தஇடத்தில் பட்டிபோடும்படி நாங் கேட்கிறோமல்ல. இப்பஞ்சகாலத்தில் விசேஷமாய்ப் புயலாலும் வெள்ளப்பெருக்காலும் சனங்கள் நட்டமடைந்திருப்பதாலும் கஷ்டமான வரியைக்குறைப்பதன்றிக் கூட்டக்கூடாதென விண்ணப்பஞ்செய்தல் நீதியாயிருக்கிறது.

யாழ்ப்பாணம்.

ஊர்ச்செய்தி—"மார்கழிமாசம் மயிர்கனையாதீரம்" என்பதை மழை ஞாபகப்படுத்துகிறது. வாடைக்கச்சான்காற்று இரண்டுமொன்றாகக்கலந்தாய் வீசுகின்றது. குளிரும் அழும்புக்கடியும் அதிகம். காய்ச்சல்குறைவு.

தேசாதிபதியின் தரிசனை—வருகிற தை௴ 15உ நமது தேசாதிபதியவர்கள் யாழ்ப்பாணத்துக்குத் தரிசனைகொடுக்கவிருப்பதால் அவருக்குச் சிறந்த உபசாரணைகள் செய்வதற்காக ஒரு ஆலோசனைக்கூட்டம் சென்ற 2உ திங்கட்கிழமை சாயந்தரம் திச்சவேமண்டபத்திலே நமது ஏசன்றுத் துரையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அதிலே [illegible] தெருச்சோடினைகள் கட்டுவதற்கும் சோபனபத்திரம் எழுதுவதற்கும் தீபக்காட்சி வாணக்காட்சி நடத்துவதற்கும் ஒவ்வோர் கொமிற்றி நியமிக்கப்பட்டது.

அரிசி நெல்வரவு—செட்டிகளுக்கு 2000 மூட்டை அரிசி சென்ற 2உ திங்கட்கிழமை கப்பலாலே யாழ்ப்பாணம்வந்து பதிக்கப்பட்டு விற்கப்பட்டன. உடனே எல்லாம் விலையாயினவாம். புரோக்கர் காசாளபிள்ளையுடைய அரிசி 1000 மூட்டையும் வந்துசேர்ந்தது. புரோக்கருடைய அரிசி குறைந்தவிலையில் விற்கப்பட்டன. நேற்றும் நெல்லேறிய உருக்கள்வந்து பதிக்கப்படுகின்றன. இனிச் சற்றே விலையிறங்கும்போலும்.

பரோபகாரச்செயல்—பஞ்சத்துக்காக யாழ்ப்பாணத்துக்குதவும்பொருட்டுப் பிரபல குத்தகைகாரராயிருந்து காலஞ்சென்ற மெஸ், வைத்திலிங்கமவர்களின் புத்திரராகிய மெஸ், வை. மார்க்கண்டர் என்பவர் அரிசி நெல் அழைப்பித்தற்காக மூன்று பாய்க்கப்பல்களை இந்தியாவுக்கு அனுப்பியிருக்கின்றனர். கொள்விலைக்கே இங்கு விற்பாரென அறிகிறோம்.

யாழ்ப்பாணச் சங்கம்—இச்சங்கத்தின் விசேஷகூட்டமொன்று சிதாகிசிலை வைக்கப்பட்டது. அவ்வேளையிலே அரசாட்சியார் புதிதாய் நியமிக்கவிருக்கும் வரிகள் சிலவற்றைப்பற்றி ஆலோசனைசெய்தனர். தபாற் தீர்வையைக்குறைத்து அதனாலுண்டாகுங்குறைவை நிவர்த்தியாக்கற்காய் உறுதிப்பதிவு உரிமைத்தத்துவம் முதலானவைக்கு முத்திரைச்செலவை ஏறறத் தீர்மானித்திருப்பது ஊருக்குப் பெரும் கஷ்டநஷ்டம் விளைக்குமென இச்சங்கத்தவரால் அரசாட்சியாருக்கு மனுச்செய்யப்பட்டிருக்கின்றது.

ஓர் அபாயம்—பெருவெள்ளத்தாலான நஷ்டம் பட்டினத்திலும் அதன்சுற்றுக்கிராமங்களிலும் மற்றைய பகுதிகளிலும் பார்க்க அதிகமாயிற்று. யாழ்ப்பாண லோக்கல்போட்டார் இந்த நஷ்டங்களுக்கு நிவிர்த்தியாகச் சனங்களுக்கு உதவிபுரியமுயற்சிசெய்கிறார்கள். சென்றவாரத்திலே ஏசன்றரின் அக்கிராசனத்தின்கீழ்நடந்த பிரக்கூட்டத்திலே வெள்ளத்தால்கஷ்டப்பட்டவர்களுக்கு உதவிபுரியும்படி பணஞ்சேர்க்கத் தீர்க்கப்பட்டது. இதற்காய் ஓர்கொம்மிற்றி நியமிக்கப்பட்டிருக்கிறது. இச்சகாயநிதிக்கு அந்தக் கூட்டத்திலேயே 3000 ரூபாய்க்குக் கையொப்பமிடப்பட்டதாம். இலங்கையின் மறுபகுதியாரும் இந்தச் சகாயமுயற்சியிற் பங்குபற்றும்படி நம் ஏசன்றாவர்கள் எல்லவர்க்கும் அபயமிட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணச் சனசமுகச்சேவைச்சங்கம் ஆபத்துக்குதவுமொழுக்குப்படி 1000 ரூபாய் கொடுத்திருக்கின்றது. அரசாட்சியார் 2000 ரூபாய்கொடுத்திருக்கின்றார். அதுமாத்திரமன்றி விழுந்த வீடுகளைக் கட்டிக்கொடுத்தற்காய் மரங்களும் சலாகைகளும் அரசாட்சியார்கொடுக்க உடன்பட்டு மரக்கறித்து ஒழுங்குபடுத்தும்வேலையை ஒப்பந்தத்தில் விட்டிருக்கிறார்கள். அகதிகளான சனங்களுக்குப் பெருந்தொகையான அரிசியும் அரசாட்சியாரால் உதவப்பட்டது.

மெஸ், T. C. B. ஜெபரத்தினம்—யாழ்ப்பாணத்திலே சுப்பிரீங்கோட்டுப் பிறக்றாசியிருக்கும் மெஸ், T. S. குக் என்பவரி[illegible] மெஸ், T. C. B. ஜெபரத்தினம் [illegible] என்பவர் [illegible] வியாகரணங்களிற் சிவில்சேவில உத்தியோகம்கடாத்த நியமிக்கப்பட்டு இங்கிலாந்திலிருந்து புறப்பட்டுவருகின்றனர். இத்தப்பிரயாணத்திலே தங்கை சகோதரர் சகோதரங்களைச் சந்தித்துச் சிலநாட் தரித்துத் திரும்புவார்.

மெஸ், யோண் மாட்டின் அவர்களின் தேகவியோகம்—யாழ்ப்பாணப் பொலிஸ் ஆபிசிலே தலைமைக்கிளார்க்கா யிருந்துவந்த மெஸ், யோண் மாட்டின் அவர்கள் சென்ற 23உ சனிக்கிழமை சாயந்தரம் காலஞ்சென்றதையிட்டு மிக்கமனத்தயரடைகிறோம். இவர்சனிக்கிழமைகாலை வழக்கம்போலப் பொலிசு ஆபிசுக்குப்போய் அங்கேவேலைபார்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு கிறுதியுண்டாயிற்று, உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோய்ப் பரிகரித்தும் குணமுறாது அன்றுசாயந்தரம் ஏழுமணிக்குக் காலஞ்செல்லலாயினார். இவருடைய தேகம் வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டு மற்றநாட்சாயந்தரம் மூன்றுதுருமார்பாடிச்செல்லத் திரளானசனர் அநுகரப்பத்தோடே பின்செல்லப் பொலிஸ் சுப்பிறின்றென்டன் மெஸ்; யோன்ஸ்துரையும் 25 பொலிசுமாரும் வாள்பிடித்து மரியாதையாகச்சூழ்ந்துசெல்லப் பிரேதசேமம் இடப்பாக நடந்தேறிற்று. இவரையிழந்து துன்புறும் புலம்புகின்ற மனைவியோடும் பிள்ளைகளோடும் சகோதரன்சகோதரியோடும் ஏமுமொருவராய் மனம்வருந்துகிறோம்;

மரணசந்தி—இலங்கைப்பரிக்குப்பகுதித் தலைமைக்கிளார்க்காயிருந்து இளைப்பாறியவராகிய மெஸ், எஸ். சுவாமிநாதனவர்கள் சனனுகத்திலே தமதுவிரகத்திலே தேகவியோகமாயினர். இவர் உபஅத்தியாதரிசியாகிய மெஸ், எ. பொன்னையா அவர்களுக்கும் பிறக்றர் மெஸ், எ. அப்பாத்துரை அவர்களுக்கும் மாதுலர். இவர்க்காய்த்துயருறுபவருடனே நம்மனுதாபமுமிருக்கிறது.

விவாகம்—பருத்தித்துறை அருணாசலம் மகாலிங்கத்தின் சிரேஷ்ட புத்திரனும் கோலாலம்பூரில் அரசாட்சி றெயில்வே உத்தியோகஸ்தருமாகிய சந்திரப்பிள்ளை சி

ன்னையாவுக்கும் மயிலிட்டியைச்சேர்ந்த ரூப பராகிய [illegible] குருஸ்பிள்ளையின் கனிஷ்டபுத்திரி மேரி ஆச்சியம்மாவுக்கும் சென்றமீ 30உ காலை 8 மணியளவில் ஊ[illegible]ணித்தேவாலயத்தில் மெய்விவாகத்திருச்சடங்கு நிறைவேற்றப்பட்டது. இப்புதிய குடும்பமானது தேவஆசிபெற்று நீடூழிவாழ்க.

கடிதம்.

கலைநிலைக் சென்மஸ்தானமாயுடையவரும் சேட்கயிஷ்டனைச்சேர்ந்த அநுராதபுரம், வவுனியா, கண்டி ஆகிய இடங்களிற் பலகாலும் உபதேசியராயிருந்து தற்போது கொக்குவில் சபையில் தேவஊழியம் நடாத்திவருபவருமான மெஸ். ஜோர்ஜ்ஆசீர்வாதமென்பவரின் இளையபெண்மணி இசேபல் ஞானம்மா கார்த்திகைமீ 21ந்திகதி காலை 8 மணியளவில் இவ்வுலகத்தைவிட்டு மறுமைக்குட் பிரவேசித்தசெய்தியை மிகவும் துக்கத்துடன் தெரிவிக்கின்றோம். இப்பிள்ளை மரிக்கும்போது வயது ஒன்றரை. அன்று சாயந்தரம் 4 மணியளவில் சுற்றமித்திரராய்க்கூடிய அநேகர் சமுகத்தில் அளம். யோசன். பொன்னர் போதகநால் வீட்டிலும் கல்லூர் சேமக்காலையிலும் பிரேதசேம ஆராதனை நடத்தப்பட்டபின் இவருடைய சரீரம் கல்லூர் திருச்சபைக்குரிய சேமக்காலையில் அடக்கம்பண்ணப்பட்டது. இப்பிள்ளைக்கு நற்காலத்திலுண்டான [illegible] எவ்வித சிகிச்சைக்கும் குணமுறாது பிள்ளையின் ஆவியைப்பிரித்து. மழலைச் சொற்களைப்பேசி மகிழ்விக்கும் இச்சமயத்தில் பிள்ளையை இழந்த பெற்றோருக்கும் மற்றோருக்கும் அன்புநிறைநாதர்த்ரச் ஆறுதல் அருள்வாராக. (கடி.)

நீர் அசௌக்கியமாய் இருக்கிறீரா?

எந்தவிதமான வாதையிலாவது உமக்கு அசௌக்கியம் உண்டானபோது, நீர் "நான் தினந்தோறும் ஒரு தடவையாவது கொல்லைக்குப் போய் வருகிறேனா?" என்று கேட்டுக்கொள்ளவேண்டும். "இல்லை" என்று ஏற்பட்டால், (இராத்திரி படுக்கைக்குப்போகும் போது) டோன் என்பவருடைய ஜீர்ண மாத்திரைகளில் (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) இரண்டு அல்லது மூன்று நீர் எடுத்துக்கொள்ளும். மறுநாள் காலையில், மலசுத்தி சகஜமாய் ஆகும். சுகமுண்டாகும். மலபந்தம் என்பது என்னவென்றால், மலம் குடலில் தங்கவேண்டிய காலத்திற்கு அதிகமானகாலந் தங்கி, விஷத்தன்மையுள்ள வஸ்துக்களை யுண்டாக்கி விடுவதேயாம். இந்த விதமான மலபந்தத்தினாலேயே இந்த உலகத்தில் கணக்கில்லாத ரோகங்கள் பிறக்கின்றன. ஆகையால், கீழே குறித்திருக்கிற ரோகங்கள் பலவும் மலச்சிக்கலினாலேயே உண்டாகின்றன என்று அறிந்துகொள்ளவேண்டும். பித்தப்பை ரோகங்கள், பித்தம், பித்தக்காய்ச்சல், அஜீர்ணம், பசிமந்தம், தைலவிஷம், அசதி, இதயவாதை, [illegible] உண்டாகும் [illegible]வை. மலபந்தம் நீடித்திருந்தால், இரத்தம் கெட்டுப்போய், தேகசௌக்கியம் கெட்டுப்போகும். (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) டோன் அவர்கள் ஜீர்ணமாத்திரைகள் மூலிகைகளிலேயே தயாரானவை.

இம்மாத்திரைகள், குடலிலிருந்து மலத்தையும், விஷவாயுவையும் வெளியாக்கி, பித்தப்பையைச் சரிப்படுத்தி, பித்தநீரைத் தாராளமாய்ப் பெருகச்செய்து, தேகத்தைச் சௌக்கியமும் அழகுமுள்ளதாக்கும். இம்மாத்திரைகள் புருஷர் ஸ்திரீகள் சிறுவர்கள் ஆகிய எல்லாருக்குமே சரீரவாதையைச் சீக்கிரத்திலே நிவிர்த்தி உண்டாக்கும்.

DOAN'S
DINNER
PILLS

12 அணா புட்டியளவு.

இவை அணா 4, 8, 12 உள்ள புட்டிகள் காகிலாம். 12 அணா புட்டியில் 60 மாத்திரை இருக்கும். 4 அணா புட்டியைவிட 3 பங்கதிகம் இருக்கும்.

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜன்ட் ஆவெ டப்பிலியூ. ஏச். நஸ்லர் துரையவர்களிடத்திலும் கிடைக்கும். (Tam

இலங்கை.

இலங்கைக் கத்தோலிக்கஐக்கியசங்கம்— சென்ற 17உ சாயந்தரம் கொழும்பிலே பொருளின் மாளிகையில் இலங்கைக் கத்தோலிக்க ஐக்கியசங்க வருஷாந்தபொதுக்கூட்டம் நடக்கலாயிற்று. சர். சம்பாயோ நீதியரசர் சபாநாயகராய் அங்குவந்துகூடிய பெருந் தொகையானோருக்குப் பலவும்பேசி ஐக்கியகட்சியார் யுத்தத்திலே வெற்றிபெற்றதையிட்டு நம்முடைய ராசசக்கிரவர்த்திக்குச் சந்தோஷமும் நன்றியுங்கூற வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைச்சொன்னார். அத்தீர்மானமானது சருவசன அங்கீகாரமுடையதாயிற்று. சங்கத்தின் அங்கத்தவரைத் தெரிந்து நியமிப்பதோடே கூட்டமுடிந்தது.

பருத்திச்செய்கை—பஞ்சுக்கு விலையதிருப்பதால் இலங்கைக்கமச்சங்கத்தார் பருத்தியை அதிகமாகப் பயிர்ப் படுத்தவிக்கவேண்டுமென்று முயன்றுவருகின்றார். அவர்களுடைய ஊக்கத்தாலே மட்டுக்களப்பு விந்தனை [illegible] மாந்தை யாழ்ப்பாணம் [illegible] கேகாலை முல்லைத்தீவு இரத்தினபுரி திருகோணமலை [illegible] அம்பாந்தோட்டை ஆகிய இடங்களெல்லாம் 300 ஏக்கரிலே பருத்தி பயிர்படுத்தவித்திருக்கிறார்களாம்.

மந்திரியாரின் மகிழ்ச்சி—சண்டை வெற்றிபாகித் சந்தோஷங்கொண்டாடுகின்ற இத்தருணத்திலே நம்முடைய கவர்ண்மேந்தும் பொதுவிலே இலங்கைமுழுதும் இச்சண்டை நல்லமுடிவுக்கு வரவேண்டுமென்று செய்த உதவிகளுக்காக நன்றிகூறுகிறேன். இலங்கை லைட்டயர்ப் பட்டாளத்தார் நல்ல யுத்தமாடினார்கள். யுத்தசேனையிலே இலங்கையர் பலர்சேர்ந்ததுஞ் சந்தோஷமே என்பனவாக இலங்கைமந்திரியார் தேசாதிபதிக்குத் தந்திமூலமாகத்தெரிவித்தார்.

கண்டியரசரின் பொக்கிஷப்பெட்டி— 1815ம் ஆண்டு கண்டியிலே நடந்த யுத்தத்தில் கண்டியரசரின் பொக்கிஷப்பெட்டி அங்கிலேய தளகர்த்தரின் கைவசப்பட்டது. அத்தளகர்த்தன் இலங்கையிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பிபோது அந்தப்பெட்டியின் இரண்டு கைபிடிகளையும் பூட்டையும் அதன் தாழ்ப்பாள்களையுங் கழற்றியெடுத்துக்கொண்டுபோய் அவைகளை அங்குள்ள தனது சிநேகிதனொருவனுக்கு உபகாரமாய்க் கையளித்தான். அவைகள் அந்தச் சிநேகிதனுடைய சொந்தக்காரரால் நெடுகலும் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. கடைசியாய் அவைகளை வைத்திருந்த துரைமகனொருவர் இந்த யுத்தகாலத்திலே செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அவைகளை யுத்தசகாயமாய்க் கொடுத்தார். செஞ்சிலுவைச்சங்கத்தவர் அதனை 10 பவுணுக விலைபேசிவிற்க எத்தனித்ததை இலங்கையரோடு சம்பந்தப்பட்டிருந்து உத்தியோகத்தாலினைப்பாறித் தற்போது இங்கிலாந்தில் வசிப்பவராகிய மெஸ். லூயிஸ் துரையவர்களறிந்து அந்த விலைகொடுத்துவாங்கி இலங்கை யரசினர்க்குக் காரியத்தைத் தெரிவித்தனர். இலங்கையரசினர் அந்தப் பத்துப்பவுணையும் அனுப்பிக் [illegible] திரையவர்களிடம் வாங்கியிருக்கிறார்கள். அது கண்டி நூதனசாலையில் வைக்கப்படும். உ. கை.

யுத்த தந்தி.

"சிலோன் டைம்ஸ்" "சுதேசமித்திரன்" "ஜனமித்திரன்" "இந்துநேசன்" "சர்வவியாபி" பத்திரிகைகளினின் றெடுக்கப்பட்டன.

பிரான்சு.

23உ லொரேயினிலும் அல்சாஸிலும் சேர்மனியரால் விட்டுவிட்டுப்போன இடங்கள் படிப்படியாய் பிரான்சுக்காரரால் பிடிக்கப்படுகின்றன. ஜெனெரால் காஸ்தெல்னோ கோல்மார் பட்டினத்தில் நுழைந்தபோது சனங்களுடைய ஆவேசம் இவ்வளவுவள்ளவென்று சொல்லமுடியாது. எலிசே மாளிகையில் பிரான்சக்குடியாசுத்தலைவர் மூசியே புவேங்காரே முதல் மந்திரி மூசியே கிளமான்சோ மாரேஷால போ(f)வு என்பவர்கள் கூட்டங்கூடிப்பேசியபோது ஸ்ட்ராஸ்பூர்க்பட்டணத்தின் சிவில் அதிகாரிகள் ஆடம்பரமாய் இணைப்புச்சடங்கு மார்கழி மீ 8ந்தேதியன்று வைக்கப்படவேண்டுமென்று முடிவு கட்டப்பட்டது. குடியரசுத்தலைவர் முதல்மந்திரி மற்றமந்திரிகள் பார்லிமெந்தின் இருசபைகளுடைய அக்கிராசனாதிபதிகள் முதலான பேர்கள் அப்போது சமுகமாகி யாவரும் ஒருமித்துச் சபையாக அப்பட்டினத்திற் பிரவேசிப்பார்கள்.

மெட்ஸ்பட்டினத்தில் சில உத்தியோகங்களில் இருக்கும் செர்மனியர்கள் பிரான்சுமட்டில் தங்கள் அலுவல்களைப் பிரமாணிக்கமாய்ச் செய்துகொண்டிருப்பாரானால் அவர்கள் அந்த அலுவல்களிலேயே இருந்து பார்த்துக்கொண்டிருப்பார்கள். குடிகளெங்கும் புதுஆளுகைக்குச் சந்தோஷத்துடன் உட்படுகிறார்கள்.

சமாதானக் கன்பரன்ஸ் கூட்டத்திற்கு வாயிருக்கும் பிரதிநிதிகள் தங்கியிருக்கப் பரீஸ் பட்டினத்தில் அநேக ஹோட்டேல்கள் இப்போதே பேசி யமர்த்தப்பட்டிருக்கின்றன. மஜெஸ்டிக் அஸ்டோரியா என்ற ஹோட்டேல்கள் பிரித்தானியராலும் க்ரீய்யோன் என்ற ஹோட்டேல் அமெரிக்காராலும் முரிஸ் என்ற ஹோட்டேல் இத்தாலியராலும் [illegible] என்றஹோட்டேல் பெல்ஜியராலும் வாடகைக்குப் பிடிபட்டிருக்கின்றன.

26உ அல்சாஸ் லொரேயின் மாகாணம் 48 வருஷகாலம் செர்மனியர் கையில் இருந்தபடியால் அவைகளின் பிரஜைகளுடைய விசுவாசத்தைப்பற்றிச் சமுசயித்துக் கொண்டிருந்தவர்களுக்குச் சந்தேகம் தீர்க்கும்படியானவிதமாய்ப் பிரான்சுச் சேனைகள் அங்கு நுழைந்தபோது காரியங்கள் நடந்திருக்கின்றன. ஜெனெரால் பெத்தேய்ன் ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ட்ராஸ்பூர்க் பட்டினத்தில் நுழைந்தபோது 3,00,000 சனங்கள் அவருக்கு நல்வரவுகூறினார்கள். அவர்சனங்களுக்குப் பிரசித்தஞ் சமயப்பத்திரத்தில் மர்செய்யேஸ் பாட்டின் வசனமாகிய Le jour de gloire est arrivee (மகிமையின்தினம் வந்துவிட்டது) என்று பேசியிருக்கிறார்.

பாரீஸ்நகரத்திற்கு நமதரசரின்விஜயம்.

27உ மாட்சிமைதங்கிய அரசரும் வேல்ஸ்இளவரசரும் அல்பட் இளவரசரும் பரீசுக்குப்போகும் வழியில் இன்றுமத்தியானம் லண்டனிலிருந்து போலோனில்வந்திறங்கினார்கள். அவர்கள்கியாதிபெற்ற "பிரோசு" என்னும் நாசகாரிக் கப்பலில் பிரயாணமாகிவந்தனர். அதற்குக் காவலாக 6 விமானங்களும் ஆகாயக்கப்பற்கூட்டமொன்றும் வந்தன. அவர்கள் அன்பாக வரவேற்கப்பட்டு வழக்கமான மரியாதைகளெல்லாஞ்செய்துமுடிக்கப்பெற்றபின்னர் அவர்களெல்லோரும் மாண்ட்ரீல் நகருக்கு மோட்டாரில்சென்றனர்.

28உ மாலையில் அரசரும் வேல்ஸ்இளவரசரும் அல்பட்இளவரசரும் பரீசில் வெகுஅன்புடன் வரவேற்கப்பட்டனர். சக்கிரவர்த்தியவர்கள்வந்து சேருவதாகக் குறிக்கப்பட்டிருந்த மாலை 2 மணிக்கு அநேகநேரத்திற்குமுன்னமே திரள் திரளான சனங்கள் அரசர் வருதற்கென்று குறிக்கப்பட்டிருந்த பாதையில் வந்துகூடினர். அரசர்பெருமான் வரும்பாதையினிருபுறத்திலும் சத்துருக்களிடமிருந்து பிடிக்கப்பட்ட 2000 பீரங்கிகள் முதலியன வைக்கப்பட்டிருந்தன. எங்குபார்த்தாலும் பிரித்தானியகொடிகளும் ஆங்கிலக்கொடிகளும் பறந்துகொண்டிருந்தன. கல்லறைகளின்மேல் விமானத்தாக்கல்களும் குண்டுப்பிரயோகங்களும் நடந்தகாலமெல்லாம் வைக்கப்பட்டிருந்த மணற்சாக்குகளில் கடைசியானவைகள் எடுத்தெறியப்பட்டன. அரசரும் இளவரசர்களும் பிரசாதிபதி பாயன்கேர் அதிகாரிசபை பிரசாதிபதிமந்திரிகள் முதலானவர்களுடன் சென்றார்கள். அவர்களெல்லோரும் இவர்களை அன்புடன் வரவேற்றனர். வெகு அலங்காரமான சோடினைசெய்யப்பட்டு இவர்களை ஏற்றிவந்த றெயில் பாஸ்டியோலேரன் றெயில்ஸ்ரேசனில் காணப்பட்டதும் திரள் திரளாக வந்திருந்த சனங்கள் ஆரவாரஞ்செய்தனர். அதுபோலுள்ளசத்தம் இதுவரையில் பரீஸ்நகரில் கேட்டதில்லை. அமரிக்கரும்பிரான்சரும் பிரித்தானியரும் ஆசிகூறினர். பிரசாதிபதி பாயின்கேரும் நமது அரசர்பெருமானும் ஒரு ரதத்தில் செல்லுகையில் சனங்களெல்லோரும் ஆரவாரஞ்செய்தனர். இரண்டாவது ரதத்திலிருந்த இளவரசர்களும் எம். கிளமன்சோ அவர்களால் வரவேற்கப்பட்டு ஆசிகூறப்பட்டனர். அன்றுள பிரசுரப்பத்திரத்தில் இளவரசர்கள் தரைப்படை கடற்படைக்கூட்டத்தைப் பார்வையிடுவார்களென்றும் பிரான்சிய பிரசாதிபதியவர்கள் அவர்களையும் அரசரையும் மாலையில் எலிசேமாளிகையில் வரவேற்று அவர்களுக்கு விருந்துசெய்விப்பாரென்றும் அப்பொழுது பிரசாதிபதியும் அரசரும் ஒருவருக்கொருவர் வந்தனஞ்சொல்லிப் பானம்பண்ணுவார்களென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எலிசேமாளிகையில் அரசரவர்களின்பேச்சு.

29உ நமதரசர் எலிசேமாளிகையில் நடந்த விருந்தில் பேசுகையில் தாங்கள் [illegible] ஒன்றுசேர்ந்து சுக துக்கங்களை ஒன்றுபோலநுபவித்துப் பொதுவிரோதியைச்செயித்து வெற்றிமாலைசூடியிருக்கும் ஒரு பெரியசாதியாரின் விருந்தினராகவிருப்பது பெருஞ் சந்தோஷத்தைத்தருகிறது. செர்மனியர்கள் முரட்டுத்தனமாகத் திரும்பத் திரும்பப் பரீசையடையவேண்டுமென்று வந்ததைத் தோற்கடித்த பிரான்சிய சேனையின் வீரத்திற்கும் மார்ஷல்போக் அவர்களின் தந்திரத்திற்கும் வந்தனம், விரோதிகளெல்லோரும் புறந்தாக்கப்பட்டுச் சமாதானத்திற்கு வரும்படி செய்யப்பட்டனர். வெற்றிமாலை சூடியதற்காக நான் பிரான்சியரைப் போற்றுகின்றேன். பிரித்தானியரும் அவ்வெற்றியில் சம்பந்தப்பட்டுள்ளார்கள். பிரித்தானியசனங்களும் பிரான்சிய சனங்களும் இப்பெரும்யுத்தத்தில் ஒவ்வொருவருடைய பெருமநோக்கங்களைக்கண்டு ஒருவர்க்கொருவர் போற்றக் கற்றுக்கொண்டதுமன்றி மனஒற்றுமையையும் ஐக்கியத்தையும் இஷ்டத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்திவிட்டனர். இவைகள் எப்பொழுதும் நாகரீகமுன்னேற்றத்திற்கும் அழியாச் சமாதானத்திற்கும் ஆலம்பமாகவே இருந்துவரும் என்றார்.

30உ இன்றுகாலை அரசர் சைனியங்களையும் தற்காலம் செயமடைந்த இடங்களின் காட்சிகளையுங் கண்ணுறுவதற்காகப் பரீசைவிட்டுப் புறப்பட்டார்.

நேற்றிரவு பிரித்தானிய ஸ்தானாபதி யிருக்குமிடத்தில் ஒரு விருந்து நடைபெற்றது. அதில் நமதரசர் மார்ஷல்போக்கிற்கு [ஆர்டர் ஆப்மெரிட்] என்ற பட்டத்தையீந்து அது உயர்ந்தபட்டமென்றும் ஐக்கியகட்சியாரின் சேனைகளை நடத்திய பெரியதலைவருக்குத் தன்னால் அளிக்ககூடிய உயர்ந்தபட்டம் அதுதான் என்றும் சொன்னார்.

பிரசாதிபதி பாயின்கேர்
பிரித்தானியரைப்புகழ்தல்.

29உ பிரான்சரும் அங்கிலேயரும் இந்தயுத்தம் ஆரம்பிக்காமலிருப்பதற்குச்செய்த பிரயத்தனங்கள் விருதாவினவென்பதைக் கவனித்தபின்பு பிரசாதிபதி பாயின்கேர் அரசர்பெருமானின் பேச்சுக்குப்பதிலாக மேன்மைதங்கிய பிரித்தானியசரித்திரத்தில் நிகரற்ற கடற்படை தரைப்படை முதலியவைகளின் கியாதியே [illegible] மனத்தைரியமும் மாணிடவர்க்க உயர்வென்னுங் கியாதியும் சேர்க்கப்படுமென்றுபேசினார். இங்கிலாந்து யுத்தம்வெகுகாலம்நீடிக்குமென்றும் வேண்டியசைன்னியமும் தளவாடங்களுஞ் சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டுமென்று உடனேயே உணர்ந்தும் அதிகமாகத் தளவாடங்கள் தேவைப்படுமென்று அச்சப்படவில்லை. உலகத்தின் ஒருகோடியிலிருந்து மற்றொருகோடிவரையிலுமுள்ள தனது இராச்சியங்களையுங் குடியேற்றநாடுகளையும் உதவிக்குக் கூப்பிட்டது. உடனே சரியானபதில் கிட்டியது உலகமுழுமையுஞ் சிதறண்டிருக்கும் வெவ்வேறு சாதியினரும் அதேசியாபிஷத்தில் அதேனைக்கத்துடன் தாய்நாட்டின் உதவிக்குவந்த காட்சியைக் காட்டியும் உயர்ந்தது வேகமுன்றுந் தனக்குத் தெரியாவிலுள்ளார். மேலும் பேசியதாவது, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் எப்பொழுதும் இருக்கப்பட்ட சுயேச்சையென்னும் சக்தியின்கைமாருக அடைந்த மேன்மைதங்கியவைகள் தான் என்ன? இவ்விதமனுப்பப்பட்ட சிறிகுறச் சைனியங்களால் நிறைந்த பிரித்தானியபடை இந்த யுத்தகாலத்தில் அநுபோகத்திலும் யுத்ததந்திரத்திலும் மேன்மையடைந்து அவ்வாறே காதரியமாயொழுகி மேன்மேலுஞ் செயமடைந்து சத்துருவைச் சமாதானத்திற்கு வரும்படிசெய்தது என்றார்.

1உ நமது அரசரும் அவரது மக்களிருவரும் பரீஸ்நகரின் பூரணஅன்பையும்பெற்றனர். அவர்கள் போகவிடைபெற்றுக்கொண்டது வருக்கமாகவிருந்தது.

அவர்கள் பிரிந்தபின்னர் நமதரசர் பிரசாதிபதி பாயின்கேருக்கு அவ்விருதேசங்களையும் [பிரித்தானியாவும் பிரான்சும்] ஒன்றுசேர்த்திருக்கும்பாசம் இனிமேல் பிரிக்கப்படாதபடி பலமாயிருக்குமென்று தந்திச்சமாச்சாரமொன்றனுப்பினர்.

பிரசாதிபதி பாயின்கேர் அதற்குப்பதிலாகச் செர்மனியரைத் தோற்கடித்த இருதேசங்களின் ஒற்றுமையும் என்றுமிருக்குமென்று பதிற்றந்திச்செய்தியனுப்பினர்.

பெல்ஜியம்.

22உ பெல்ஜிய அரசரும் அரசியும் இராசகுமாரர்களும் குதிரை சவாரிசெய்துகொண்டு தலைநகரமாகிய பிரஸெல்ஸ் பட்டணத்தில் நுழைந்தார்கள். பிரித்தானிய இளவரசர் ப்ரின்ஸ் ஆல்பேர்ட் அரசருடைய வலதுபாரிசத்தில்சவாரிசெய்துகொண்டுபோனார். [illegible] வலம் [illegible]மாயிருந்தது. ஜெனரெல்மார்கள் பேர்ட் பூட் ப்ளூமர் இவர்கள்மூவரும் தங்கள்தங்கள் இராணுவப்பிரிவின் தலைப்பில் சவாரி செய்துகொண்டுபோனார்கள். அட்மிரல் செயெஸ் பிரித்தானிய கப்பற்படையின் பிரதிநிதியாய்ப் போயிருந்தார்.

பெல்ஜிய மந்திராலோசனைச் சங்கம் இராஜிநாமாக்கொடுக்கப்போகிறது. புதுமந்திராலோசனைச்சங்கத்தில் ஆறு கத்தோலிக்கர்களும் மூன்றுலிபரல்களும் நாலு சோஷியாலிஸ்ட்களும் இருப்பார்கள் மூசியே தேலாக்ருவா என்பவர் முதல்மந்திரியாக இருப்பார். புதுஅரசாட்சி ஒரு ப்(f)ளெமிஷ் சர்வகலாசாலையையும் சுலந்த சனங்கள் வாக்குச்சீட்டுப்போடும்சத்துவத்தையும்ஸ்தாபிக்கக் கருதுகொண்டிருக்கிறது. செர்மனியுடன் உறவாடிக்கொண்டிருந்த அநேகபெல்ஜியர் மறியல்செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் ஓடிப்போனார்கள் ஆஸ்திகள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அநேக கிற்றூர்களில் குண்டு மருந்து தோட்டாக்கள் ஏற்றப்பட்ட றெயில் வண்டித் தொடர்கள் வெடித்தன, ஜெய்ரோ டூயிசு என்ற கிற்றூர்கள் அவைகளால் நாசமாயின. அநேகசிவர் மாண்டார்கள் பலர் காயப்பட்டார்கள்.

24உ பெல்ஜியதேசத்தின் தலைநகரமாகிய பிரஸெல்ஸ் பட்டணத்தில் பிரதிநிதிமண்டபத்தின் நிலவறைகளில் நாலு பயங்கரமான வெடி வெடிகள் செர்மனியரால் வைக்கப்பட்டிருந்தன. அவைகளுக்குப்பக்கத்தில் சில வெடிமருந்துகளும் தோட்டாக்களும் இருந்தன, நல்லவேளையாய்ச் செர்மனியர் தங்களுடைய பிசாசுத்தன்மையான எண்ணத்தை நிறைவேற்ற முடியாதவர்களாய் அப்பட்டினத்தை விட்டுப்போய்விடக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

பிரித்தானியா.

பருத்திநூல்நூற்பவர்கள் வேலைநிறுத்தஞ்செய்யத் தீர்மானித்தல்.

25உ பருத்திநூல்நூற்குஞ் சங்கத்தார் தங்களது சம்பளத்தில நூற்றுக்கு எண்பதுவீதம் முற்பணம்வேண்டுமெனக்கேட்டு மார்கழிமீ இரண்டாம்வாரத்தில் வேலைநிறுத்தஞ்செய்வதாகத் தீர்மானஞ்செய்தனர். இதற்குச் சாதகமாக 10232 பேரும் பாதகமாக 424 பேரும் சமுகங்கொடுத்தனர். இயந்திர வேலைக்காரர்கள் சங்கத்திலும் அதிகப்பேர் இதுபோலச் சம்பளமுற்பணத்திற்காக வேலை நிறுத்தஞ்செய்ய ஆலோசிக்கின்றனர் யந்திரச்சாலை சொந்தக்காரர்கள் யுத்தத்திற்குமுன் கொடுத்துவந்த சம்பள விகிதப்படி நூற்றுக்கு எண்பதுவீதம் முற்பணமாகக் கொடுப்பதாய விக்கின்றனர்.

புதிய பார்லிமெந்துத்தேர்தல்.

25உ இன்றுமாலை அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்படும்விஷயமாக அநேக பிரசங்கங்கள் செய்யப்பட்டன. மெஸ். பொனர்லாவும் கிளாஸ்கோநகரத்தில் ஓர் பிரசங்கஞ்செய்தார். அதன் சாராம்சமாவது;

உலகத்தின் வருங்கால நன்மைக்கும் இக்கோரயுத்தத்தில் தலையிட்ட சாதியினரின் நன்மைக்கும் யுத்தத்தில் செயமடைய உதவிசெய்த தேசத்தினர்களின் ஐக்கியம் எங்ஙனமிருந்ததோ அங்ஙனமே இனியுமிருக்கவேண்டியது அவசியம். தற்காலம் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கும் விஷயமாக அநேக யுத்தசமாதானக் கூட்டத்திற்குச்செல்லும் பிரித்தானிய பிரதிநிதிகளுக்குத் தேசமுழுமையிலுமுள்ள சனங்களினுதவி யிருக்கவேண்டுமென்றார். பிரித்தானிய பணவுதவியன்றி ஐக்கியகட்சியார் வெற்றிபெற்றிருக்க முடியாதென்றும் இப்பொழுது பிரித்தானியாவுக்குப் பணக்கஷ்டம் அதிகமாயேற்பட்டதென்றுங் குறிப்பிட்டார். அரசாட்சிச்சேனைகளுக்கும் இந்தியசேனைகளுக்கும் அவர் வந்தனஞ்சொல்லிச் சேனைகளில் நூற்றுக்கு 85 வீதம் தேர்தலிற் சம்மதி கொடுக்கக்கூடியவர்களாயிருக்கவேண்டுமென்றார்.

அபேட்சகர்கள் தேர்தெடுக்கப்படுவதில் தாராளமான நோக்கமிருக்கவேண்டுமெனத் தேசத்தின் எல்லாப்பகுதிகளிலும் எண்ணங்கள் உதயமாய்வருகின்றன.

மெஸ். லாயிட் ஜார்ஜ் உடனே இவ்விஷயத்தில் தலையிட்டு யாதொரு [illegible] தடுக்கவேண்டிய ஏற்பாடுகள்செய்யும்படி கேட்கப்படுகிறார்.

அமரிக்கரின் நன்றியுபகார கொண்டாட்டநாள்
அமரிக்கரின் நன்றியுபகார கொண்டாட்டநா

ன் 25உ லண்டனில் கொண்டாடப்பட்டது. இயங்கு மைதானங்களிலும் பார்லிமெண்டுக் கட்டிடங்களிலும் மற்றெல்லாப் பொதுக்கட்டிடங்களிலும் அமெரிக்கக்கொடிகள் யூனியன் ஜாக்கொடிகள் பக்கங்களில் பறந்துகொண்டிருந்தன. முக்கியமாக அமெரிக்க ஐக்கியபட்டானத்தின் பிரதிநிதிகளும் கடற்படைப் பிரதிநிதிகளும் அடங்கியகூட்டமொன்றுகூடிச் சென் மார்டின்ஸ் கோயிலில்வந்தனோபசாரஞ்செய்தனர். மெஸ, பால்போரும் லோட் கர்சனும் பிரசன்னமாயிருந்தனர். ரோட்ஸவியே ப் பிரசங்கஞ்செய்தார். அமெரிக்கரின் தேசகீதமும் பாடப்பட்டன.

2உ யுத்த ஓய்வு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டதன் பின் செர்மனியிலிருந்து இதுவரை 40,000 கைதிகளுக்குமேல் லண்டனுக்குத் திரும்பிவந்திருக்கின்றனர்.

5உ லண்டனிற்கூடிய ஐக்கியதேசாங்கத்தின் சபையில் தப்பியோடியசெர்மன்சக்கிரவர்த்தியை மறுபடி ஒப்புவிக்கச்செய்து விசாரணைசெய்யவேண்டியதவசியமெனத் தீர்மானித்துவிட்டனர் என்று அரை உத்தியோகமுறையில் உறுதிப்படுத்தப்படுகிறது.

செர்மனி.

21உ தற்கால சமாதானநிபந்தனைகள் மிகவும் கஷ்டமாயிருப்பதால் அவைகளைச் சரிதப்படுத்தவேண்டுமென்று செர்மன் அரசாட்சிகேட்டதற்கு மகாசபைத்தலைவர் போ(f)ஷ் கூடாதென்று சொல்லிவிட்டபடியால் செர்மன் தற்கால சமாதான கமிஷன் அதைப்பற்றி மிகவும் மனவருத்தமடைந்திருக்கிறது. சிலநிபந்தனைகள் முற்றும் நிறைவேற்றப்படக்கூடாதவைகளாயிருக்கின்றனவென்றும் அவைகளால்செர்மனியில் கலகமும்பஞ்சமும் அதிகமுண்டாகுமென்றும் அந்தக்கமிஷன் சொல்லுகிறது.

25உ யுத்தத்தைத்தொடங்கிவிட்டது செர்மன் சக்கிரவர்த்தியும் பிரதானமந்திரிகளும் மிலிட்டரி அதிகாரிகளுந்தான் என்று மறுக்கப்படாத உருசுக்களைப் பவேரிய அரசாட்சி இப்போது உலகத்துக்குத்தெரியும்படியாய் பிரசித்தஞ் செய்துகொண்டிருக்கிறது. யுத்தஆரம்பத்தில் பெர்லின்பட்டினத்தில பவேரிய ஸ்தானபதியாயிருந்த வான் லெர்செந்பெ(f)ல்டினுடைய ரிப்போர்ட்டிலிருந்து மேற்கண்ட நிச்சயமானவிஷயங்கள் எடுக்கப்பட்டு அச்சிடப்படுகின்றன.

செர்மனியில் கலகம் அதிகரித்துக்கொண்டேவருகிறது பொலின் அதிகாரத்தை உதறிப்போடவேண்டுமென்று அநேகர் ஆசிக்கின்றனர். கொனிக்ஸ்பேர்க்கிலும் வடமேற்குச் செர்மனியிலும் மாகாணங்களிலும் சனங்கள்பிரஷ்யஅதிகாரத்திற்குப் புறம்பாயிருக்கும்படி தீர்மானித்திருக்கிறார்கள். பழையஅரசாட்சியின்கட்டில் அநுதாபமுடைத்தானவர்களும் வேண்டியபேர் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படையாய்ச்சொல்ல அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆலந்திலிருக்கும் நாலாவது செர்மன் தரைப்படையின் தலைவனுகிய ஜெனரல் சிக்ஸ்ட்வான் ஆர்னிம் என்பவர் சேசபெட்ட்சிகேவில் பிரிவினை ஏற்படுத்திப் பழையஆளுகையை மறுபடியும் ஸ்தாபிக்கத்தான் தலையிட்டுக்கொண்டிருக்கிறதாகத் தெரியப்படுத்துகிறேன். அதே அபிப்பிராயங்கள் சைன்பட்டணங்களிலும் மற்றவிடங்களிலும் இரகசியமாயும் வெளியாக்கமாயும் கூறப்படுகின்றன.

26உ வரப்போகும் சமாதானசங்கத்திற்கு நியமிக்கப்படும் செர்மன் பிரதிநிதிகள் பரீஸ்பட்டினத்தில் தங்கியிருக்க மாட்டார்களென்றும் பட்டினத்திற்கு வெளியிலிருந்தே சமாதானத்தை தெரிக்கிறவர்களென்றும் சொல்லப்படுகிறது.

30உ செர்மனியானது ஹீலிகோலெண்ட் வடபாகத்தை சேர்ந்த ஹப்பர்லெபன் முதலிய பகுதிகளுக்கப்படவும் டொண்டர்ஸ் அப்பனோட் முதலியவைகளில் அதிகபாகத்தையும் டென்மார்க்கிற்குக் கொடுத்துவிட்டதாக உறுதியாய்ச் சொல்லப்பட்டது.

3உ மார்ஷல்போச், செர்மன் யுத்தநிறுத்தப்பிரதிநிதிகளுக்கு மிகப்பலமானதும் திறமானதுமான கோரிக்கைகளைக்கொடுக்கும்படி கடைசிநிர்ணயமென்று அனுப்பியிருக்கிறார். மார்கழிமாதம் 2ம்தேதியோடு அவ்வறிக்கையில குறிப்பிட்ட காலம் முடிந்துவிட்டது. முடிவென்றும் இன்னுந்தெரியவில்லை. ஆனால் செர்மன் பத்திரிகைகள் யுத்தநிறுத்தம் இன்னும் நீடிக்குமென யாதொரு சமிக்கையுமில்லையென்றும் சிவில் ஒழுங்குகள் இன்னும் ஸ்திரப்படுத்தப்படவில்லையென்றும் ஐக்கியகட்சியார் செர்மனியை ஆதீனம்செய்துகொள்வார்களென்று வற்புறுத்துகின்றன என்று கோப்பன் ஹேகன் பெர்லின்தந்திமொன்று கூறுகின்றது.

2உ செர்மன் பழைய சக்கிரவர்த்தியும் அவர் தம்மனைவியும் செர்மனிக்குத் திரும்பவரக்கூடாதென்று தடைசெய்துவிட்டனர்.

4உ லீப்சிக் என்னுமிடத்திலுள்ள சோவியட் கட்சியார் யுத்தசைனியங்களிருக்கும் பிரதான ஸ்தலங்களிலுள்ள சைன்யங்களெல்லாம் குலைக்கப்படவேண்டுமென்றும் ஹிண்டன்பர்க் கைதிசெய்யப்படவேண்டுமென்றும் தீர்மானித்திருப்பதாய் "லோக்கல் ஆன்சீகர்" என்னும்பத்திரிகை கூறுகிறது.

4உ பழையசக்கிரவர்த்திகெய்சரின் உண்மைச்சிப்பாய்கள் என்று சொல்லப்படுவோர்கள் குருவெனுமிடத்திலுள்ள லைாட் கௌஸில் பறந்துகொண்டிருந்த சிவப்புக்கொடியை இருமுறை கீழிறக்கி எரித்தனர். அன்னமும் எர்க்லேயில் திரளான சனக்கூட்டங்கள் காகோஷம்செய்து மாஜி கெய்சர் பிரசங்கங்களுக்கு மெச்சிப்புகழ்ந்தாரென்றும் கலகம் நடவாமற் தடுப்பதற்காக தொழிற்சபையாரும் சிப்பாய்சபையாரும் அக்கொடியை மறுமுறை பறக்கவிடாமற் செய்ய தீர்மானித்திருக்கின்றனரென்றும் "ரீனிஷ் வெஸ்ட்பாலிஷ்சஸிடுங்" என்னும் பத்திரிகை கூறுகின்றது.

3உ செர்மன் சனப்பிரதிநிதி பார்த் தெற்கிலுள்ள சைன்யத்தின் நிலைமையைக்குறித்துப் பரிதாபப்படுவதோடு 1814ம் வருஷம் நெப்போலியனுடைய சைன்யம் அனுபவித்த கஷ்டத்தை இ சைன்யமும் அனுபவிக்கநேரிடுமெனப்பயப்படுகின்றார்.

பழைய செர்மன் சக்கிரவர்த்தி கொலைக்குற்றஞ்சாட்டப்படுகிறார்.

2உ செர்மன் நீர்மூழ்கிக்கப்பலால் மூழ்கடிக்கப்பட்ட "லூஸிடேனியா" என்னும் கப்பலிற் குடியிருந்த ஒரு பிரான்சுக்காரரின்மனைவி பிரான்சு நியாயஇலாகா மந்திரிக்கு வழக்கமாக நடைபெறுவனபோல் கெய்சரின்மீது கொலைக்குற்றஞ்சாட்டிப் பிராது செய்திருக்கின்றனர்.

செர்மனிய சக்கிரவர்த்தி தனதறிக்கையை வெளியிடல்.

5உ பழைய செர்மன் சக்கிரவர்த்தி "என்னை நீதியினால் குற்றங்களைச்சாட்டிப் பயமுறுத்துகிறார்கள். நான் அவைகளை எதிர்க்கவேண்டும். ஆகலால் என்மீது குற்றங்கள் கூறப்படுமானால் நானும் எனது அறிக்கைகளை பிரசுரிக்கவேண்டும். மேலும் நான் இப்பொழுது ஒரு தனிக்கைதி, தற்காலமுள்ள செர்மன் அரசுக்கு நான் நாசவிசுவாசமுள்ளவனாக விருக்கவேண்டும் மற்றவர்களைச் சமாதானப்படுத்தக்கூடியவர்களாயிருக்கக்கூடிய ஒரு அறிக்கையையும் நான் வெளியிடக்கூடாது" என்றார்.

30உ செர்மனிய சக்கிரவர்த்தி தனக்கு சிம்மாசனம் வேண்டாமென்று முற்றிலும் வெறுத்ததாக வந்தஅறிக்கையோடு பழைய ராசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு பட்டாளக்காரர்களுக்கிசைந்து உழைத்துவருவதாகவறிய ஆசிரியமுண்டாகிறது. பவேரிய இளவரசர் ருபார்ட் அவிட்ச்லாண்டிலிருக்கிறாரென்றும் அங்கு ஆஸ்திரியதேசத்து ராசகட்சிக்காரர்களும் செர்மன் ராசகட்சிக்காரர்களும் அடங்கிய கூட்டமொன்று கூடப்படுமென்றறிவிக்கப்படுகிறது.

1உ ஒல்லாந்தில் செர்மனிய சக்கிரவர்த்தியின் நிலைமையை யறியவும் அவரை அங்கு வைத்துக்கொண்டிருப்பதனுலேற்படும் சேனைவிரனுக்கும் ஒல்லாந்துக்குமுள்ள சம்பந்தத்தையுமறியவும் அரசாங்கத்தார் ஓர் கமிஷன் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

சக்கிரவர்த்தி தனது மந்திரிகளில் குற்றஞ்சாட்டுகிறார்.

செர்மனிய சக்கிரவர்த்தி புரொபசர், விஜுனர், கெய்சர் ஓடிப்போவதற்கு ஐந்துநாட்களுக்குமுன் தனக்கும் அவருக்குமடந்த சம்பாஷணையைகோலோன் பத்திரிகைக்கு எழுதுகிறார். யுத்தத்திற்குச் சிலவாரங்களுக்குமுன்னர் ஏற்பட்ட கொள்கைகளுக்கெல்லாம் பெத்மன் ஹால்வெக்கும் வான் ஜாகோவுந்தான் காரணமென்றும் தன்னைத் தானிருப்பத்திற்கு விரோதமாக அவர்கள் நார்வேக்கு அனுப்பினார்களென்றும் தான் செர்மனியிலிருந்தால் அந்த யுத்தத்திற்கு கெய்சர்தான் காரணமென உலகமுழுமையும் சொல்லுமென்று பெத்மன்ஹால்வெக் தனக்குச்சொன்னதாகவும் குறிப்பிட்டார். தனக்குத்தனது மந்திரிகளிடமிருந்து தான் நார்வேயில் இருக்குங்காலத்தில் யாதொரு ரிப்போர்ட்டுகளும் வரவில்லை; உலகத்தில் நடப்பனவைகளைத்தான் நார்வேப் பத்திரிகைகளிலிருந்தே அறிந்ததாகவும் தெரிவித்தார். இவ்விதமாகத்தான் பிரித்தானிய படைக்கப்பல்கள் போய்விட்டனவென்று தெரிந்ததும் தனது சொந்த இஷ்டப்பிரகாரமே திரும்பிவந்ததாகவும் கடைசியாக ருஷியாதான் யுத்தத்திற்குக்காரணமென்றும் ஏனெனில் யுத்தம் ஆரம்பமாகுமுன்னமே ருஷியபடை எல்லைவரைக்கும் வந்திருந்ததென்றும் அறிவித்தார்.

5உ ஓடிப்போன செர்மன் இளவரசர் தனது உரிமைகளைவிட்டு சனஞ்செய்யும் அறிக்கையை வெளியிடவிருக்கிறார்.

செர்மனியர்கள் யுத்தநிறுத்த நிபந்தனைகளின்படி திரும்பக்கொடுக்க வாரம்பித்துவிட்டனர். ருஷியாவிலிருந்து வாங்கப்பட்ட 30 கோடிபவுனையும் ஐக்கிய கட்சியார்களிடம் கொடுத்துவிட்டனர். அவர்கள் அதைச் சமாதானம்முடியும்வரையும் வைத்திருப்பார்கள். பிரான்சிலிருந்து களவெடுக்கப்பட்ட சித்திரவேலைகளைத் திருப்பக்கொடுத்துவருகின்றனர். இதுவரை திருப்பக்கொடுத்தவைகளின் பெறுமதி 8 கோடி பவுணிருக்குமென்று கணக்கிடப்படுகிறது.

ஜெனரல் மாக்கன்சனின் சைன்யம் கைதிசெய்யப்படும்.

1உ புடாபெஸ்டு 170000 ஆட்களடங்கிய மெக்கன்சன் அவர்களின் சைன்யம் பிரான்சின் உத்தரவின்படி கைதுசெய்யப்படுமென்று ஓர் தந்தி கூறுகிறது.

மற்றொருவர் சிம்மாசனந்துறந்தார்.

வர்டம்பர்க் அரசர் சிம்மாசனம் துறந்ததாக ஸ்டட்கார்ட்டிலிருந்துவந்த அறிக்கையாலறிகிறோம்.

கோலோன் என்னுமிடத்தில் பலத்தகலகம்.

5உ கோபன்ஹேகன்-மார்கழி மாதம் 3ம் தேதி ஹேரப்பன் ஹேகனில் பெருத்த கலகமொன்று ஏற்பட்டது. கலகக்காரர்கள் கடைகளைத் தொன்னேயடித்து ஆராய்ப்பாருள் வைத்திருக்கும்சாலையைக் கொள்ளையடிக்கவெத்தனித்தனர். ஆனால் மெசின்பீரங்கிகள் முன் கொண்டுவரப்படவும் பின்வாங்கிவிட்டனர். பொலிசருக்கும் கலகக்காரருக்கும் இரவு முழுமையும் நடந்தபோரில் அநேகம் மரணமடைந்தனர்.

ஒல்லாந்து.

22உ ஒல்லாந்துதேசத்தில் சரணமடைந்திருக்கும் பழைய செர்மன்சக்கிரவர்த்தி அடைபடாவிடில் அதனுலுண்டாகும் லாபநஷ்டங்களுக்கு ஒல்லாந்தர் உத்தரவாதமாயிருக்கவேண்டுமென்று ஐக்கியதேசங்கள் எச்சரித்திருக்கின்றன.

செர்மன்சக்கிரவர்த்தியின் குடும்பத்தைச்சேர்ந்தபலர் பெர்லின்பட்டினத்துக்குத் திரும்பிப்போயிருக்கிறார்களாம்,

23உ ஒல்லாந்துதேசத்தில் செர்மன்சக்கிரவர்த்தி அடைபட்டிருக்கும் அமிரோஞ்சென் கோட்டையைச்சேர்ந்த மைதானத்தில் ஒருவரும் சையாவது அவர் வெளியிற் போகவில்லையென்று லண்டன்பட்டணத்திலிருக்கும் உலாந்தாஸ்தானுபதி உறுதியாய்க் கூறுகிறார்.

செர்மன் சக்கிரவர்த்தி சாதாரண மனிதன் என்றமுறையில் ஒல்லாந்த தேசத்தில் தங்கியிருந்தாரென்றும் சண்டையில் அத்தேசத்திற்கு சேதமாய்முடிவுவந்த அனேகாயிரம்மனிதர்களைப்போல அவரும் அடைக்கலம் பெறுவாரென்றும் பாரிஸ்பட்டினத்திலுள்ள உலாந்தாஸ்தானுபதி ஆபீஸிலிருந்து ஒருபத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒல்லாந்தருடைய விவரிப்பின்மட்டில் பிரான்சு அபிப்பிராயம் திருப்திபாயில்லை. சக்கிரவர்த்திராசதுரோகத்தைக்கொடுத்ததைப்பற்றி உத்தரவுப்பத்திரம் ஒன்றுமில்லாதபடியால் அவர் அகத்தியம் அடைபடவேண்டுமென்று பிரான்சுக்காரர் கேட்கிறார்கள்.

செர்மன்இளவரசன் ருடொர்ஜி என்றகடலிலுள்ள உயீசிங்கென் என்றஇட்டில் பார்சனேஜ் என்ற மாளிகையில் அடைபடவேண்டுமென்று உலாந்தா அரசாட்சி தெரிவிக்கிறது. அந்தத்தீவார் முழுகுடிப்பல்கலால் மிகவும் சேதப்பட்டவர்களானபடியால் அந்தஇராசகுமாரன் தங்கள்மத்தியில் இருக்கக்கூடாதென்று ஆட்சேபிக்கிறார்கள்.

26உ ஒல்லாந்த அரசாட்சி லிம்பர் வழியாய்ச் செர்மன்சேனைகள் போகும்படியாய் வழிவிட்டதும் சக்கிரவர்த்திக்கு உலாந்தாவில் சரணங்கொடுத்தும் செர்மன் டார்பிடோப்படகுகளை உலாந்தாவில் ஓடிப்போய் அடைபடவிட்டுவிட்டதும் தற்கால சமாதான நிபந்தனைகளுக்கு விரோதமென்று ஐக்கியதேசஆரசுகள் ஒல்லாந்த பிரதானிமந்திரிக்கு முறைப்பாடுசெய்தார்கள். ஒல்லாந்த அரசாட்சி திருப்திகரமானபதில் கொடுக்கவில்லை.

இரண்டாவது சபைக்கூட்டத்தில் பிரதானமந்திரி ஐக்கியகட்சியார் செர்மனியரின் சேனைகள் வழியாய்ப் போவதை ஒருகாலமும் ஆட்சேபிக்கவில்லையென மறுத்தார். மேலும் இரண்டாவது சபைக்கூட்டத்தில் ஆசாரச்சீர்திருத்தம் ஜனநாயக அதிகாரங்கள் முதலியவைகளை உடனே செய்யப்படவேண்டுமென்று தீர்மானித்தார்கள், 43 பேர்கள் தீர்மானத்திற்கு சாதகமாகவும் 68 பேர்கள் பாதகமாகவுமிருந்தனர்.

26உ கேக்—நூற்றுக்கு ஐந்துவீதம் வட்டி கொடுத்து 350000000 பிளாரின்கள் கடன்வாங்குவதென இரண்டாவது மந்திராலோசனைச்சபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

ஒல்லாந்தும் பழைய செர்மனியசக்கிரவர்த்தியும்.

4உ இரண்டாவது இராசாங்க மந்திராலோசனைச்சபையில் கலக ஜனநாயகக் கட்சிக்காரராகிய விஜ்கூப், பழையசெர்மன்சக்கிரவர்த்தியைப்பற்றிச் சீக்கிரம் தீர்மானிக்கப்படல் வேண்டுமென்றும் இல்லாவிடில் ஆகாரப்பொருட்களை இறக்குமதிசெய்வதில் கஷ்டங்கள்நேரிடுமென்றும் கேட்ட கேள்விக்குச் சாதகமாக நால்வரும் பாதகமாக 59 பேர்களும் சம்மதங்கொடுத்ததினுல் அக்கேள்வி தோல்வியடைந்தது.

ருஷியா.

23உ ருஷியாவில் சமஸ்தருஷியகவர்ன்மெண்டு என்று ஓர்புதியஅரசாட்சி எக்காட்டெரினோடார் என்றஊரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் பழைய வாலண்டியர் இராணுவத்தின ஜெனரல்மார்களும் மற்றவர்களும் சேர்ந்திருக்கிறார்கள் அந்தப்புதிய கவர்ன்மெண்டுக்குத் தேசாதிபதி சலோனேவ்என்பவர் பிரதமமந்திரியாகநியமிக்கப்பட்டிருக்கிறார். உக்ரேயன் நாட்டில் போல்ஷெவிக்குகளை விலக்கிப்போட்டு ருஷியா தேசம் முழுவதையும் ஒன்றாய்ச்சேர்க்க அந்தக் கவர்ன்மெண்டு தீர்மானித்திருக்கிறது. புதுக்கவர்மெண்டின் பலமும் எதிர்காலநிலைமையும் எப்படியிருக்குமென்று தெரியாது.

பாரிஸ் டிஸம் 3. பிரான்சுப்பத்திரிகைகளில் ருஷியாவில் நடக்கும் குழப்பத்தைப்பற்றியும் ஐரோப்பிய சமாதானவிஷயங்கள் இதையே பொருத்திருக்கின்றனவென்றும் ஆகலால் கலகக்காரர்களையடக்கவேண்டியது நேசகட்சியாருக்கு இன்றியமையாததென்றும் வாதித்துக்கொண்டிருக்கிறதென்றும் ஹாவாஸ் எஜென்ஸி கூறுகின்றது.

ருஷியகைதிகளின் கஷ்டங்கள்.

26உ செர்மனியிலிருந்து விடுவிக்கப்பட்ட ருஷியகைதிகள் திரள்திரளாக ருஷியஎல்லையில்வந்து உடையும் ஆகாரமுமில்லாமல் கஷ்டப்படுகின்றனர். அவர்கள் க்ஷயரோகத்தாலும் வயிற்றுளைச்சலினுலும் வருந்துகின்றனர். தெருக்களிலே ஆயிரக்கணக்கானசனங்கள் உயிர்துறக்கின்றனர் லெனின் ராணுவக்கட்சியாரை எவ்வளவோ உதவிசெய்யும்படிகேட்டும் யாதொரு பிரயோசனமுமில்லை. இராச்சியக் கிளர்ச்சிக்காரருமெனப் பயப்படப்படுகின்றது. மாஸ்கோநகரத்தெருவில் அநேகம்குதிரைகள் ஆகாரமில்லாமல் இறக்கிறதாக ஒரு பிரான்சிய ஆபீசர் ருஷியாவிலிருந்து அறிவிக்கிறார். மனிதர்கள் குதிரைகளையும் நாய்களையும் புசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

துருக்கி.

4உ உதுமான் அரசாட்சியின் வேண்டுகோளின்மேல் பெர்லின் அரசாட்சியார் செர்மனியில அடைக்கலம்புகுந்திருக்கும் அன்வர்பாஷா, டலட்பாஷா, டெஜூமல்பாஷா, நாசிம்பாஷா, ஷேக்கிரியே முதலியவர்களைக் கைதுசெய்யும்படி உத்தரவளித்தனர்.

உதுமான் அரசாட்சியார் ஐந்துலட்சம் பவுன்களை எடுத்துக்கொண்டு ஒடேஸாவுக்கு ஓடிப்போகும் பெர்திரியே என்பவனுட்பட இருநூறு அருகிய வர்த்தகசங்கத்தாரை கைதிசெய்தனர். மேற்படி பெர்திரியே என்பவன் அப்பணத்தை அலெப்போ வென்னுமிடத்தில் ஒருமாதகாலத்திற்குள் சேகரித்தான்.

அமெரிக்கப்படை.

யுத்தம் நிறுத்தினுல் 1919 வது வருஷத்திற்குக் கடற்படைச் செலவுமதிப்பு 118 கோடி டாலர் என்றுகுறைக்கப்பட்டிருக்கிறதென மெஸ, டானியல் அறிவிக்கிறார். முன்மதிப்பிடப்பட்டதொகை 2644000000 டாலராகும். 10 பெரிய யுத்தக்கப்பல்களும் 6 யுத்த நாசகாரிகளும் 140 சிறியயுத்தக்கப்பல்களும் கட்டப்படுவதற்கு மதிப்பிடப்படிருந்த 60 கோடியில் கொஞ்சமுங் குறைக்கப்படவில்லை.

யுத்தசமாதானக்கிரியை.

26உ ஐக்கியதேசப் போர்க்கப்பல்கள் கருங்கடலில் நுழைந்துவிட்டன. சகவாரிக் கப்பல்கள் சல்ருகாலாட்ஸ் துறைமுகங்களுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.

24உ ஆஸ்திரியாவில் எதிர்க்கலக முயற்சிகள் மிக சுறுசுறுப்பாய் நடந்துகொண்டிருக்கின்றன. இராசகட்சிக்காரர் வியென்னுபட்டணத்தில ஏற்பட்டிருக்கும் தற்கால அரசாட்சிக்கு விரோதமாய்க் குடியானவர்களைக்கிளப்பப் பல உபாயங்களை எடுத்திருக்கிறார்கள்.

செர்மனியின் பேடென்னாட்டு இராண் டியூக்கும், ப்ரின்ஸ் மாக்கம் சிம்மாசனத்தை இராசினாமாக்கொடுத்துவிட்டார்கள்.

யுத்தமறியற்காரர்.

21உ மறியலசெய்யப்பட்ட பிரித்தானியகைதிகள் செர்மனியில் சொல்லமுடியாத கஷ்டமடைந்து கொண்டிருந்ததல்லாமல் அவர்கள் சாப்பாடில்லாமலும உடுப்பில்லாமலும தங்கள்தேசத்திற்குத் திரும்பப்போகவிட்டபடியால் பிரான்சைவந்தடைவதற்குமுன் பலர்வழியில்மாண்டனர். மீதியானவர்கள பார்ப்பதற்குப் பரிதாபமானவர்களாய் எலும்புந்தோலுமாய்த் திரும்பிவந்தார்களாம். இச்சமாசாரங்களை பிரித்தானியர் கேள்விப்பட்டு மிகுந்த மனக்கிளர்ச்சி அடைந்தார்கள்.

சேர்வியாவும் மாண்டிநீக்ரோவும்.

4உ மாண்டிநீக்ரோ அரசாங்கத்தார் ஸ்கூப்ஷ்டினா நிக்கலஸ் அரசரைச் சிம்மாசனத்தினின்று அகற்றத் தீர்மானஞ்செய்து விட்டதாகவும் மாண்டிநீக்ரோவையும் சேர்வியாவையும் ஒன்றுசேர்க்கிறதாகவும் கூறிய ஆஸ்திரிய அறிக்கையை மறுக்கிறதாக அறிவிக்கப்படுகிறது.

பார்சியம்.

4உ கலகக்காரர்கள் பார்சிக மந்திரியைக் கைதுசெய்துவிட்டனர். துருக்கிஸ்தானத்தில் சோவியட்பிரதிநிதிகளை விடுதலைசெய்யும்வரை இவரும் கைதியாகவேயிருக்கவேண்டும்.

ருமேனியா.

4உ 50 ராசகுடும்பத்தினர் திரும்பிவந்துவிட்டனர். ஜெனரல் கோவண்டாவைப் பிரதம மந்திரியாகவுள்ள புதிய ராசாங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது.

போர்க்கப்பல்கள்.

27உ ஐக்கிய சேனையாரைச்சேர்ந்த 5 போர்க்கப்பல்களும் 2 குரூசர்கப்பல்களும் 9 சங்காரிக்கப்பல்களும் அட்மிரல் கல்தோர்ப்பால் நடத்தப்பட்டு செபஸ்தபூல் பட்டினத்திற்குப் புறப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு முன்னேடியாய் ஒரு குருசர்க்கப்பலும் இரண்டு சங்காரிக்கப்பலும் ஒருமுழுகப்பலும் எதிரேவே போயிருக்கின்றன.

சீனு.

ஷாங்கையில் கைஇருப்பிருக்கும் அபின்எரிக்கப்படும்.

ஷாங்கை அரசாட்சியார் தங்களது நோக்கத்தின்படியும் ஐக்கியகட்சியாரைச்சந்தோஷிக்கச்செய்யவேண்டியும் ஷாங்கையிலுள்ள கைஇருப்பு அபினையெல்லாம் எரித்துவிடத் தீர்மானித்திருப்பதாகவும் நூறுபெட்டிகள் முன்னுடியே விற்கப்பட்டதென்றும் மீதியிருக்கும் ஆயிரத்திருநூறு பெட்டிகள் ஐக்கியகட்சியாரின் பிரதிநிதியின் முன்னிலையில எரிக்கப்படுமென்றும் பீக்கிங்கிலிருந்து "டைம்ஸ்" பத்திரிகைக்கு வந்த தந்தியொன்று கூறுகின்றது.

நமது பத்திரிகை.

அடுத்த பத்திரிகை வெளிப்படுத்தினம் நத்தார் விடுதலைநாளாகையால் **28உ** சனிக்கிழமைவெளிவரும். தற்போது முத்திரைச்செலவு அதிகரித்தமையால் பத்திராசிரயம் ரூபா **2ம்** தபாற்செலவு சதம் **75ம்** அனுப்பவேண்டும். இவ்வருட முடியுமுன் வருஷவருடப்பணத்தை அனுப்பினவர்க்குச் "சுந்தரன்செய்ததந்திரம்" என்னும் புஸ்தகமொன்று இனமாக அனுப்பப்படும். அப்படி அனுப்புவோர் தபாற் செலவுக்குமாக ரூபா **3** அனுப்பவேண்டும்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத அவுஷதங்கள்

34 காலருளென்னுமவாத்திபேதிக்கு மருந்து — இக்கொடியரோகத்து இதுசைண்ட்ஒளஷதம் டப்பா ஒன்றுக்கு ரூபா 1. வி பி செலவு 1 முதல் டப்பாக்கள்வரையில அனுப்ப அனுபோகம் 35 லக்ஷ்மிவிலாச தைலம்—மிகவும் வாசனையுள்ள தைலம், தலைமயிர் கண் புருவம், மீசை, தாடி மெத்த செழிப்பாகவும், கருப்பாகவும், நெருக்கமாகவும் வளர்ச்சியும். இதன் இன்பமான சுகந்தம் இத்தைலத்தை உபயோகிக்கிறவர்களை சுற்றிக்கொண்டே கெடுகோம் வீசும், மூக்கொதிப்பை போக்கி, சித்தபிரமை தலைமயக்கம், புத்திமந்தம், நித்திரையில்லாமை முதல்

வைகளை போக்கும். விலை சீசா 1—க்கு அணா 12—ஒன்று அல்லது 2 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவுகள் அணா 5 பிரத்தியேகம்

36 மலபந்தநிவாரணி—மலசலக்கட்டு அக்கினிமாந்தம் வாய்வு குடல்புரட்டல் மூலச்சூடு காந்தல் இளைப்பு மூலம் சொரியாமை புளித்தஏப்பம்நீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் கடதயமாகும் டப்பா ஒன்றுக்கு விலை அணா 10, வி பி செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்

37, மஹாகோரோசனை மாத்திரை—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம் இளைப்பு, வலிமயக்கம், தெற்குத்திக்கைசன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், மூக்குமாந்தம் ஊதணம், செவ்வாப்பு, கடுவான், கப்பன்பால்மாந்தம்முதலியவெல்லாமாந்தங்களும், கருங்கிரந்தி செங்கிரந்தி மலசலக்கட்டு முதலியதுகளும், ஸைசாம், மூடைசுரம்முதலான பலவித சுரங்களும் அடியோடீக்கும் சீசா 1-க்கு விலை அணா 10. 1 முதல் 6 சீசாக்கள்வரையில், வி, பி, செலவு அணா பிரத்தியேகம்.

38 விஷநாஸ்திலை—எப்பேர்க்கொத்த தலைவலியும் செத்தியின் இரண்டு பொட்டுகளிலும் இம்மருந்து கொஞ்சம் தடவி நன்றாகத்தேய்க்கவேண்டும் இப்புசோய் கழுத்துநோய் பக்கசூலை கைகால்பிடிப்பு முதலியவும் இன்னும்தேகத்தில் காணும்மற்றுமுள்ள சகலவலிகளுக்கும் இம்மருந்தில்கொஞ்சமெடுத்து நோயுள்ளவிடத்தில் நன்றாய்தேய்க்கக்கூடியதாகும். தேள்கொட்டுவக்காலிபூரான் இதுகள்கொட்டின அல்லது கடித்த விடத்தில் இம்மருந்தைத்தடவிநன்றாகத் தேய்த்தால் சவுக்கியமாகும், சீசாவொன்றுக்கு அணாஎட்டு விபி செலவுஒன்று முதல் ஆறுசீசாக்கள் வரையில் அணாஐந்து பிரத்தியேகம்

அத்தர் உன்னத வாசனைத்திரவியங்கள் முதலானவைகளின் விலைவிபர ஜாபிதா.

உயர்ந்தகோரோசனை தோலாஒன்றுக்கு ரூபா [illegible] உயர்ந்தபச்சைக்கற்பூரம் தோலா ஒன்றுக்குருபா இரண்டு உயர்ந்த குங்குமப்பூ தோலா ஒன்றுக்கு ரூபா2. விபி செலவுபிரத்தியேகம்

உசிதமான அத்தர்திவிகைகள்—ரோசாப்பூ மல்லிகைப்பூஜாதிப்பூ மகிழம்பூ விளாமிச்சம்வேர் மரிக்கொழுந்து தாழம்பூசவாது முதலியபுஷ்பங்களின்முதத்தரமான அத்தர்வகை தோலா 1-க்கு ரூபா 1 அணா 8, வி பி செலவு பிரத்தியேகம்

அம்பர்-இத்தகைகர்தத்தில் கொஞ்சமெடுத்து உடுப்புகளுக்குப்போட்டால் தேகத்திற்பூசலாம் முகத்திற்றடவினால் பருக்கள்கறுப்புப்புள்ளிகள் மேகப்படர் மாசு அரிப்பு முதலியவைநீக்கி முகத்திற்கு வசீகரத்தைத்தரும் வெற்றிலையில் தடவித்தாம்பூலத்துடனுபயோகித்தால் மிக்கமனோகரத்தைத்தரும் கொஞ்சமெடுத்து வெந்நீருடன்கலந்து ஸ்நானஞ்செய்தால்வெள்ளியெல்லாம் சுகந்தபன்னீர்வாசனையுள்ளதாகும் மனக்களிப்பையுண்டாக்கித்தேகசிரமதையாற்றும் விலை டப்பாவொன்றுக்கு அணா 8. 1முதல் 12 டப்பாக்கள்வரையிலனுப்ப விபிமுதலியசெலவுகள் அணா 5 பிரத்தியேகம்

இந்தியன்பெட்டலைட்டு—அதிமனோரம்மியமானசுகந்தலைஸ்போட்டலம் உடுப்பு பெட்டிகளில்வைத்திருந்தால் உடைகளுக்கு மிகவும் உன்னதமானசுவாசனையைத்தருவது மன்றியில் வண்டுமுதலிய பூச்சிகள் அணுகாமற்காக்கும்இதன் இன்பமான சுகந்தம் நெடுநாள்நிற்கும் பொட்டலம்ஒன்றுக்கு விலை அணா4, 1 முதல் 12 பொட்டலங்கள்வரையிலனுப்ப விபி செலவு அணா 5 பிரத்தியேகம்

43சுகரமயிர்கறுக்கச்சாயம்—இதன் சீசாவுடன் சுற்றியிருக்கும் டாக்குமெண்ட்படி உபயோகித்தால்நரைத்தமயிரும் செம்பட்டைமயிரும் நரைப்பதற்குமுன்னிருந்த கறுப்புநிறத்தையும் பளபளப்பையுமடையும் இதை உபயோகித்தால் முகலட்சணமும்வசீகரமுமுண்டாவதன்றிக் கிழவர்களைவாலிபர்களைப்போல் தோற்றச்செய்யும் விலைசீசாஒன்றுக்குரூபா1. 1முதல்6சீசாக்கள்வரையிலனுப்ப விபிசெலவுஅணா 5 பிரத்தியேகம்

நாக்குப்பூச்சிமருந்து—குடலிலுள்ளஎல்லாவித கிருமிகளையும்வெளியாக்கி நாக்குப்பூச்சியினாலுண்டாகும் எல்லாவிதபாதைகளையும்நிவாரணஞ்செய்யும் தேகஆரோக்கியத்தைத்தரும்நாக்குப்பூச்சிகள் குடலிலிருந்தால்அடிவயிற்றில்களைப்பு சிறிதுமைஅபரிதமான பசியைப்போல்தோற்றல்சாப்பிட்டபின் வயிற்றுநோவுவயிற்றுப்பேர்க்கு வாய்நாற்றம் வாந்தி வெதுட்டல் சம்பந்தவலி [illegible] ஆசனத்திலும்அரிப்பு வாயில் உமிழ்நீர் ஊறல் நாக்குஇழுத்துக்கொள்ளல் சிலசமயம் மலச்சிக்கல் சிலசமயம் மலக்கழிச்சல் முதலிய பற்பல நோய்கள் நாக்குப் பூச்சிகளால் உண்டாவதை இம்மருந்துமுற்றிலும் குணமாக்கும். விலை சீசாஒன்றுக்கு அணா பத்து, ஒன்றுமுதல் பன்னிரண்டு சீசாவரையிலனுப்ப வி பி செலவு அணா ஐந்து பிரத்தியேகம்.

உடுப்புகளுக்கு விலாசம்போடும் அழியாதமை அல்லது இங்கி—பருத்தி கம்பளி பட்டு முதலியவற்றிலாக்களில் எவ்வளவு தடவை வண்ணாங்களைத் துவைத்தாலும் அல்லது வெளுத்தாலும் விலாசம் எக்காலத்திலும் அழியாது இம்மையினால் விலாசம்போட்டால் உடுப்புத் திருட்டுப்போகாமலும் மாற்றப்படாமலும் காக்கலாம். விலை சீசா ஒன்றுக்கு அணா எட்டு, வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்

தாம்பூலவிஹாரம்—தாம்பூலம் தரிப்பவர்களுக்கு அதிஅவசியமான மனக்களிப்புண்டாக்கக்கூடிய வாசனைக் கலவை விலை டப்பா ஒன்றுக்கு அணா [illegible] வி பி செலவு ஒன்றுமுதல் பன்னிரண்டு டப்பாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

ஓம்வாட்டர்—இது சாதாரணமாய்க் கடைகளில் பெரிய சீசாக்களில் விற்கும் ஓம்வாட்டரல்ல. எம்மால் தயாரிக்கும் ஓம்வாட்டர் அவுன்ஸ் சீசாக்களில்விற்கப்படுகிறது. இதைத் துளிகள் கணக்காகவே உபயோகித்தால் போதமானது: இச்சிறுசீசாவிலுள்ளதை இருபதுநாறு அவுன்ஸ் சுத்தசலத்துடன் கலந்துகொண்டால் கடைகளில்விற்கும் ஓம்வாட்டரைவிடச் சிறந்த ஓம்வாட்டராகும். வயிற்றுப்பொருமல் வயிற்றுவலி அக்கினிமாந்தம் அசீரணபேதி இவைகளுக்குக்கொடுத்தால் சவுக்கியமாகும் சீரணசக்தியை அதிகரிக்கும் காலரா வாந்திபேதி ரோகத்திற்கு இதைக்கொடுத்துத் தகுந்தகுணத்தைக் கண்டதுண்டு, விலைசீசாஒன்றுக்கு அணா எட்டு. வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்

எனது விலாசம்

பி. சுப்பராவ்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

MY ADDRSE
P. SUBBRAOY
Ayurvedic Pharmy
Sri Venkedasa
Perumal Koil
Sannathy
Tanjore

கடல்துரை தேவை.

வியாபாரிகள விலைவிபரத்துடன் இதனடியில் கண்டவருக்கெழுதவும்.

தி. இரத்தினபிள்ளை.
2131 தாயார்சாய்ப்புவீதி
செட்டிதோட்டம், மவுண்ரோட்டு சென்னை.

பம்பாய் இமிடேஷன் பட்டுப்புடவைகள்.

16 முழம் நீளம் 46 இஞ்சி அகலம். இது பார்வைக்குமெவருக்கோத்தியாயும் தற்கால நாகரீகத்தின்மாதிரியாயும் உபயோகிப்பவர்களுக்கு உற்சாகத்தைத் தரக்கூடியதாயுமிருக்கும். இதில் பலவித பூக்களும புட்டாக்களும்போட்டு மெகு அழகாயிருக்கும். இதைத் துவைத்தும் சலவைசெய்தும் கட்டலாம். ஒருமுறை வாங்கப்பார்த்தால் உண்மை விளங்கும். புடவை 1-க்கு ரூபா 5—8—0. ஒரே தடவையில் 4 புடவைகள் வாங்கினால் வி. பி. சார்ஜ இனும். பிரியமான வர்ணங்களில அனுப்பப்படும்.

மதுரை புட்டா சேலை.

18 முழம் நீளம் 2 முழம் அகலமுள்ளது. சாயத்திற்கு உத்தரவாதம். அதில்அநேகவிதமான புட்டாக்கள்போட்ட பல ரகங்களுண்டு. ஒவ்வொருசேலை வாங்குவோர்க்கும் எலெக்டிரிக் பௌண்டேன்பேனா ஒவ்வொன்று பரிசு அளிக்கப்படும்.

விலை ரூபா	3—12—0
பாலாமணி மாங்காய்சேலை விலை ரூபா	3—8—0
பசதா தலைக்கொடிசேலை விலை ரூபா	3—4—0
சகுந்தலா இமிடேஷன்பட்டுப்புடவை	ரூ.5—8—0
காசாபுரம் சரிகைசேலை	ரூ.4—8—0
ஹோம் ரூல் சேலை	ரூ. 12—0—0

தற்போது 100-க்கு 25 வீதம் கூட.

சி. சி. லிங்கம் & கம்பெனி.
சௌகார்பேட்டை மதராஸ்.

Veritable! Kind!! Permutable'!!



Rs. 2.0.0 will bring you one goldcoloured framed SPECTACLE. For every order 4 spectcles will be sent and you are requested to select one. Please return the three spectacles after your selection.

Dont miss this golden opportunity.

Apply— SANDOW WATCH & Co
Sowoarpet, Madras.
சான்டோ வாச்சு கம்பெனி
சௌகார்பேட்டை, மதராஸ்.

SENSATIONAL DISCOYERY,
OF AMERICA.
ELECTRIC SOLUTION



Specific for:—
General Debility.
Loss of Manhood.
Nervous Debility.
Rheumatism.
Dyspepsia.
Costiveness.
Loss of Appetite.
Piles.
Paralysis.
Gonorrhea.
Diabetes.

It lends or concentrates Electric Current, the want or superfluity of which in the human constitution causes all sort of diseases. It acts like a charm where Allopathic, Homœopathic, Hakimi or Ayurvedic medicines totally failed.

Price— 1 Phial for a month's use Rs. 1/—Postage up to 3 phials As. 6.

Foreign Postage up to phials Rs. 1/—

Sole Agent: Dr. D. D HAZRA
Fatchpur, Garden-Reach P. O.
CALCUTTA

ஆசியாவின் இரண்டு சுகந்தங்கள் எவை?

OttoMohini

ஒடோமோகினி.

இரண்டு அல்லது மூன்று துளிகள் கைகுட்டையில் தெளித்தால் நறுமணம் பொருந்த பூந்தோட்டத்திலிருந்தாற்போல் மனதிற்கு உல்லாசத்தை யுண்டாக்குகின்றது.

RobiniaOil

ரோபினி ஆயில்.

இவ்விரண்டையும் மறவாதேயுங்கள். இத்தைலம் ஸ்திரீகளின் கூந்தலைக் கறுப்பாயும் பட்டுப்போல் மிருதுவாயும் நீண்டு வளரச்செய்து ஸ்திரீகளின் முகத்திற்கு அழகைத் தருகின்றது.

ஒடோமோகினி	½ அவுன்ஸ்	ரூபா	2-4—0
"	1 டிராம்	ரூபா	1—0—0
"	சார்டுகள் டஜன்	ரூபா	0—12—0
ரோபினியா ஆயில்	சீசா	ரூபா	1—0—0

ஒடோமோஹினிடிபோ,
94 சிறைபஜார், மதராஸ்.

எங்கும் கீர்த்திபெற்ற

பி. எஸ. வாரியரின் ஆர்ய வைத்யசாலை.

கோட்டக்கல் S. மலபார். (இந்தியா)

ஸகல வைத்யர்களுக்கும் நோயாளிகளுக்கும் தேவையான எல்லா ஔஷதங்களையும் மலையாளம் ஆயுர்வேத சாஸ்திரமுறைப்படி தயார்செய்து எப்பொழுதும் ஸகாயமான விலைக்குக்கொடுத்துவருகிற வைத்யசாலை தென்னிந்தியாவில் இஃதொன்றுதான் மிகவும் பேர்போனது.

ஏழைகளுக்கு காலை 7-மணிமுதல் 9-மணிவரையில் தர்ம வைத்யம் செய்யப்படும். இங்குவரும் வியாதிஸ்தர்களை தேக பரிசோதனை செய்து சொல்ப விலைக்கு மருந்துகள் கொடுப்பதோடு இவ்விடத்திலேயே இருந்து சிகிச்சை செய்துகொள்ளவேண்டிய எல்லா ஏற்பாடுகளும் சௌகரியமாகச் செய்துகொடுக்கப்படும்.

வெளியூரிலுள்ளவர்கள் தத்தம் ரோகங்களை விபரமாக எமக்கெழுதிக்கொண்டால் தகுந்த ஔஷதங்கள் நிச்சயித்து உபயோகிக்கக் கிரமங்களுடன் வி. பி. மூலமாயனுப்பப்படும். கடிதங்களையெல்லாம் ரகஸ்யமாகவே வைத்துக்கொள்ளப்படும்.

சில முக்யமான ஔஷதங்கள்.

க்ஷீரபலா தைலம்:—எல்லா வாதரோகங்களையும் குணப்படுத்தும். 101 முறை காய்ச்சினது அவுன்ஸ 1-க்கு ரூ. 3-0-0.

கஸ்தூரி மாத்திரை:—இருமல், க்ஷயம், மூர்ச்சையாகுதல், கர்ப்பவலி, வாயு உபத்திரவம், விலாப்பக்கம் நோக்காடு, மூச்சு திணறுதல், சந்நிபாத ஜ்வரம் இவைகளைக் கண்டிக்கும். டஜன் 1—க்கு ரூ. 0-12-0.

மதனகாமேஸ்வர லேகியம்:—தாதுபுஷ்டியை யுண்டுபண்ணுவதில் மிகவும் பேர்போனது. 40 ருபாயிடைபவுண்டு 1—க்கு ரூ. 7-8-0.

சாரிபாரஸம்:—புஷ்டியுண்டாக்கி சரீரத்துக்கு குளிர்ச்சியைக்கொடுத்து ரத்தசுத்திசெய்யும் உயர்ந்த தன்னாரி எஸ்ஸன்ஸ. 4 அவுன்ச சீசா 1—க்கு ரூ. 1—7—0.

அசுமார கஷாயம்:—இது முக்கியமாய் ஸ்திரீகளுக்கு மாதவிடாய்காலங்களிலுண்டாகும் பொறுக்கமுடியாத வயிற்றுவலி ரத்தகுன்மம்முதலான எல்லா கோளாறுகளையும் நிவிர்த்திசெய்து ஸந்தானபாக்யமடையும்படி செய்யும். சீசா 1—க்கு ரூ. 3—0—0.

தன்வந்திரகஷாயம்:—ஸகலவிதமான வாதரோகங்களுக்கும் பிரஸவித்த ஸ்திரீகளுக்கும் மேலானகுணத்தைச்செய்யும். சீசா 1—க்கு ரூ. 3—0—0.

விஷூசிகாரிகுளிகை:—காலரா (வாந்திபேதி) என்னும் கொடியவியாதியை சீக்கிரம் கண்டிக்கவிடும். டஜன் 1—க்கு ரூ—0—12—0

நாரஸிம்ஹசூரணம்:—ஜலதோஷம், பீனிசம், சிரோபாரம், காஸரோகம் முதலான கழுத்தக்குமேலுண்டாகும் வியாதிகளை சௌக்கியப்படுத்தும். சீசா 1—க்கு ரூ—0—5—0, 40 ரூபாயிடைருத்தல் 1—க்கு ரூ. 7—8—0.

ஸ்வர்ணத்திராவகம்.—இது பத்தரைமாற்றுள்ள தங்கத்திலுண்டாக்கப்பட்டது. க்ஷயரோகம், பக்ஷவாதம், பலவீனம், தாதுபலமில்லாமை, அக்கினிமாந்தியம் முதலானவைகளுக்கு ஆச்சர்யமான குணத்தைச்செய்யும். 1 அவுன்ஸ் சீசா 1—க்கு ரூ, 8—0—0.

சந்த்ரோதயரஸாயனம்:—பலகாரணங்களினாலுண்டாகும் இந்திரியநஷ்டம், பலவீனம், கைகால்அசைதல், ஓய்ச்சல், அஜீர்ணம், வயிற்றுவலி, கிராணி முதலானவைகளைப்போக்கி தாதுபுஷ்டியையும் சுகானுபோகங்களுக்கு இன்பத்தையுமுண்டாக்கும். 40 ரூபாயிடைருத்தல் 1-க்கு ரூ. 12—0—0.

இன்னும் அநேகவித ஔஷதங்களும் விற்பனைக்குத் தயாராகவிருக்கின்றன. விலை ஜாப்தா வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர் ஆரிய வைத்யசாலை.
கோட்டக்கல், மலபார். [இந்தியா]

Printed and published by S.Tambimuttupillai at his Atchuvaly Gnanapragasa Yanthira office, Atchuvaly, Jaffna.